ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

திருச்சின்னமாலை

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருச்சின்னமாலை

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

மன்னு திரு மந்திரத்தின் வாழ் துவயத்தின் பொருளும்⋆
துன்னு புகழ்க் கீதை தனில் சொன்ன எண்ணான்கின் பொருளும்⋆
அன்ன வயல் கச்சி அருளாளர் திருச்சின்ன ஒலி⋆
இன்ன படி என்றுரைத்தான் எழில் வேதாந்தாரியனே

ஏகாந்த மூன்றும் எழிலால் உரைசெய்து⋆
மாகாந்தம் செய்தருளும் வள்ளல் தான்⋆
சாகாந்த தேசிகனாம் தூப்புல் திரு வேங்கடேச குரு⋆
வாசகமே எங்களுக்கு வாழ்வு

பரிச்சின்னமான இரு நால் எழுத்தின் பல் வண்மை எல்லாம்⋆
விரிச்சு நலம் பெற ஓதவல்லோர்க்கிந்த மேதினிக்கே⋆
மரிச்சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்கும் மால் வரதர்⋆
திருச்சின்ன ஓசையின் இனிமை உண்டோ மற்றைத் தேவருக்கே

‡ ஈர் உலகைப் படைக்க எண்ணி இருந்தார் வந்தார்⋆
எழில் மலரோன் தன்னை அன்றே ஈன்றார் வந்தார்⋆
மாருத மண் நீர் ஆகும் மாயோர் வந்தார்⋆
வானோடெரி தாம் ஆகும் மறையோர் வந்தார்⋆⋆
சூரியர் தம்முடனே துலங்கு தூயோர் வந்தார்⋆

சுரர்களுக்கன்றமுதருள் சுந்தரனார் வந்தார்⋆
வாரிதி சூழ் வையகம் வாழ்வித்தார் வந்தார்⋆
வண்மையுடன் வரம் தருவார் வந்தார் தாமே ॥ **1** ॥

அரு மறையை ஊழி தனில் காத்தார் வந்தார்⋆
அது தன்னை அன்றயனுக்களித்தார் வந்தார்⋆
தரும வழி அழியாமல் காப்பார் வந்தார்⋆
தாமரையாளுடன் இலங்கும் தாதை வந்தார்⋆⋆
திரு உரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்⋆
திரு அருளால் செழும் கலைகள் தந்தார் வந்தார்⋆
மருவலர்க்கு மயக்குரைக்கும் மாயோர் வந்தார்⋆
வான் ஏற வழி தந்தார் வந்தார் தாமே ॥ **2** ॥

அனைத்துலகும் காக்கும் அருளாளர் வந்தார்⋆
அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார்⋆
தினைத்தனையும் திருமகளை விடாதார் வந்தார்⋆
தேசொத்தார் மிக்காரும் இல்லார் வந்தார்⋆⋆
நினைக்க நமக்கின் அறிவு தந்தார் வந்தார்⋆
நிலை நின்ற உயிர் தோன்ற நினைந்தார் வந்தார்⋆
எனக்கிவர் நான் இவர்க்கென்ன இனியார் வந்தார்⋆
எழுத்தொன்றில் திகழ நின்றார் வந்தார் தாமே ॥ **3** ॥

நாம் வணங்கத் தாம் இணங்கா நிற்பார் வந்தார்⋆
நம்மை அடைக்கலம் கொள்ளும் நாதர் வந்தார்⋆
நாம் எமக்காம் வழக்கெல்லாம் அறுத்தார் வந்தார்⋆
நமக்கிது என்றுரையாமல் வைத்தார் வந்தார்⋆⋆
சேமம் எண்ணி எம்மை அன்பர்க்கடைத்தார் வந்தார்⋆
செழும் தகவால் திண் சரணாம் ஈசர் வந்தார்⋆

தாம் அனைத்தும் தீ வினையைத் தவிர்ப்பார் வந்தார் ⋆
தமக்கே ஆய் எமைக் கொள்வார் வந்தார் தாமே ॥ **4** ॥

உலகெல்லாம் உள்ளே வைத்துமிழ்ந்தார் வந்தார் ⋆
உலகுடம்பாய்த் தாம் உயிராய் நின்றார் வந்தார் ⋆
அலை கடலாய் ஆனந்தம் அடைந்தார் வந்தார் ⋆
அளவில்லா அருள் ஆழிப் பெருமாள் வந்தார் ⋆⋆
திலகம் எனும் திருமேனிச் செல்வர் வந்தார் ⋆
செழும் குணங்கள் இரு மூன்றும் உடையார் வந்தார் ⋆
இலகு சுடர் முழு நலமாம் இனியார் வந்தார் ⋆
எல்லார்க்கும் கதி ஆனார் வந்தார் தாமே ॥ **5** ॥

அருளாலே விலங்கிரண்டும் அழிப்பார் வந்தார் ⋆
அஞ்சிறையைக் கழித்தருளும் அன்பர் வந்தார் ⋆
மருள் வாரா வகை நம்மைக் காப்பார் வந்தார் ⋆
வானேற வழி நடத்தி வைப்பார் வந்தார் ⋆⋆
தெருள் ஆரும் தெளி விசும்பு தருவார் வந்தார் ⋆
திண் கழல் கீழ் வாழ நமக்கருள்வார் வந்தார் ⋆
பெரு வானில் அடிமை நம்மைக் கொள்வார் வந்தார் ⋆
பிரியாமல் காத்தளிப்பார் வந்தார் தாமே ॥ **6** ॥

அகலகிலாத் திருமகளார் அன்பர் வந்தார் ⋆
அடி இரண்டும் ஆறாகத் தந்தார் வந்தார் ⋆
புகல் இல்லார் புகல் ஆகும் புனிதர் வந்தார் ⋆
பொன் உலகில் திருவுடனே திகழ்வார் வந்தார் ⋆⋆
அகிலம் எலாம் ஆனந்தம் ஆனார் வந்தார் ⋆
அடி இணைக் கீழ் வைத்தடிமை கொள்வார் வந்தார் ⋆

பகல் நடுவே இரவழைக்க வல்லார் வந்தார்⋆
பகல் ஒன்றாய் இரவழித்தார் வந்தார் தாமே ॥ **7** ॥

தருமன் விடத் தாம் தூது போனார் வந்தார்⋆
தரணி பொறாத் திண் பாரம் தவிர்த்தார் வந்தார்⋆
அரு மறையின் பொருள் அனைத்தும் விரித்தார் வந்தார்⋆
அஞ்சின நீ என்னை அடை என்றார் வந்தார்⋆⋆
தருமம் எலாம் தாம் ஆகி நிற்பார் வந்தார்⋆
தாமே நம் வினை அனைத்தும் தவிர்ப்பார் வந்தார்⋆
பரம் எனது நீ புலம்பேல் என்றார் வந்தார்⋆
பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தார் வந்தார் தாமே ॥ **8** ॥

வஞ்சனை செய் பூதனையை மாய்த்தார் வந்தார்⋆
மல்லர் மதகரி மாள மலைந்தார் வந்தார்⋆
கஞ்சனைப் போர்க் கடும் சினத்தால் கடிந்தார் வந்தார்⋆
கண் நுதல் முன் வாணன் தோள் கழித்தார் வந்தார்⋆⋆
வெஞ்சொல் தர வீடு கொடுத்துகந்தார் வந்தார்⋆
விலக்கில்லா வழி நடத்த விரைந்தார் வந்தார்⋆
பஞ்சவரைப் பல வகையும் காத்தார் வந்தார்⋆
பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார் தாமே ॥ **9** ॥

‡ அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்⋆
ஆனை பரி தேரின் மேல் அழகர் வந்தார்⋆
கச்சி தனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்⋆
கருத வரம் தரும் தெய்வப் பெருமாள் வந்தார்⋆⋆
முத்தி மழை பொழியும் முகில் வண்ணர் வந்தார்⋆
மூலம் என ஓலம் இட வல்லார் வந்தார்⋆

உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார் ⋆
உம்பர் தொழும் கழல் உடையார் வந்தார் தாமே ॥ **10** ॥

‡ மறைத் தலையில் இசை எழுத்தில் வணங்கும் வாக்கில் ⋆
மந்திரத்தில் நாலெழுத்தாம் திருநாமத்தில் ⋆
நிறைத்திலகு வேற்றுமையில் இரண்டாம் ஒன்றில் ⋆
நெடுமால் தன் கீதை எல்லாம் நிறைந்த சொல்லில் ⋆⋆
உறைத்தவர் கண்டுரைத்த பொருளான எல்லாம் ⋆
உயர் விரத அருளாளப் பெருமாள் தேசின் ⋆
திறத்தில் இயை திருச்சின்னமாலை பத்தும் ⋆
செவிக்கினிதாம் சிற்றின்பம் இசையாதார்க்கே ॥ **11** ॥

அடிவரவு — ஈரு அரு அனைத்து நாம் உலகு அருளாலே அகலகில்லா தருமன் வஞ்சனைசெய் அத்திகிரி மறை கேசவன்

திருச்சின்னமாலை முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்